*கவனிக்க.- 08.02.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1798 - 2013 පෙබරවාරි මස 15 වැනි සිකුරාදා - 2013.02.15

*1798 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பட்டியல் | 24 |
| நானாவித அறிவித்தல்கள் | 25 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2013, மாச்சு மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நொத்தாரிசுமார் பட்டியல்

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. உணவட்டுன, யடகம, எகொடகவத்த, இல. 44A என்னுமிடத்தில் வதியும் திரு. ஜகத் ரவீந்த்ர குமார மாசகோரால அவர்களை காலி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. தங்காலை, விதாரன்தெனிய, பெதிகம, ''சிங்ஹகிரி'' என்னுமிடத்தில் வதியும் திரு. முனசிங்க ஆரச்சிகே நீல் அவர்களை தங்காலை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. மஹரகமை, எல்ஹென வீதி, இல. 19/2 என்னுமிடத்தில் வதியும் திருமதி தினுஷா தில்மினி ஜாகொடகே அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. மாத்தறை, தெவிநுவர, ராசந்தெனிய, கல்கருவத்த, "கசுன்" என்னுமிடத்தில் வதியும் திரு. ஹேவா உலுவதுகே கசுன் ஆலோக அவர்களை மாத்தறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. கொழும்பு 06, மாயா அவெனியூ, இல. 69/1A என்னுமிடத்தில் வதியும் செல்வி கிறிஸ்டின் டொமினிகா அன்ரே கொரேரா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
26.12.2012.

2-497/3

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. அம்பலாங்கொடை, பனியன, ரணசூரிய மாவத்தை, இல. 19/8ஏ, என்னுமிடத்தில் வதியும் திரு. கோறலேகே சதுர தர்ஷன அவர்களை பலப்பிட்டிய நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. நுவரெலியா, லெபனன் வீதி, ''லெபனன் நிவச'', இல. 11/114 என்னுமிடத்தில் வதியும் திரு. புஸ்வல ஹேவகே சுரேஷ் கயான் அவர்களை நுவரெலியா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. குன்னேபான, நாபான தென்னகோன் வத்த, இல. 93/1 என்னுமிடத்தில் வதியும் திரு. விக்ரமசிங்க ராஜபக்ஷ வாசல முதியன்சேலாகே அஜித கோசல பண்டார அவர்களை கண்டி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. கோட்டை, எத்துல் கோட்டை, இல. 703 என்னுமிடத்தில் வதியும் திருமதி சுமுது நவமாலிகா நவரத்ன அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. தெரணியாகலை, ஹம்பானவெல என்னுமிடத்தில் வதியும் திரு. பஸ்நாகல கம்லத் ராலலாகே சந்ரா லக்ஷ்மன் கம்லத் அவர்களை அவிசாவளை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. கல்கிசை, ஹோட்டல் வீதி, இல. 16 என்னுமிடத்தில் வதியும் திரு. மஹேஷ் நரேந்ர த அல்விஸ் அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

7. நுகேகொடை, கொஹுவல, கிறீன் பாத், இல. 6 என்னுமிடத்தில் வதியும் செல்வி மானம் சஷானி த சில்வா அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
26.12.2012.

2-497/1

---

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் - நியமனங்கள்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. மஹரகம, நாவின்ன ஸ்ரீ தேவானந்த மாவத்தை, இல. 59/24 என்னுமிடத்தில் வதியும் திரு. ஹேவா ரணவீரகே சதுர சமந்த அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. குருநாகல், வெலகெதர உயன, இல. 237 என்னுமிடத்தில் வதியும் திரு. பதம்புரெ கெதர ரணவீர பண்டார அவர்களை குருநாகல் நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. நிட்டம்புவ, நீர்க்கொழும்பு வீதி, இல. 154/1 என்னுமிடத்தில் வதியும் செல்வி ரத்நாயககே வத்சலா ரோசினி ரத்நாயக்க அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. கணேமுல்ல, நாந்துனவத்த, அமரஜய 2, இல. 439/1ஏ, என்னுமிடத்தில் வதியும் திருமதி மல்லவ ஆரச்சிகே தோன நதீஷா ஸ்வர்ணமாலி அமரசிங்க அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. பிட்டகோட்டை, மாதிவெல, மந்திரி வீடமைப்பு தொகுதி, இல. டி5 என்னுமிடத்தில் வதியும் செல்வி ஹேவா தொன்டில்கே நீலியா சந்தரேணு அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. குளனி, பிலபிட்டிய, பியகம வீதி, இல. 738 என்னுமிடத்தில் வதியும் செல்வி மாகவிட்டகே சுனாரா ருமாலி பெரேரா விஜேசிங்க ஜயவர்தன அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

7. தங்கொட்டுவை, மொருக்குளிய வீதி, இல. 237/ஏ என்னுமிடத்தில் வதியும் திரு. குருகுலசூரிய ஜோசப் பெட்ரிக் க்ளிபட் பர்னாந்து அவர்களை சிலாபம் நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

8. மொரட்டுவை, பழைய காலி வீதி, இல. 95 என்னுமிடத்தில் வதியும் செல்வி நாவிமனகே நயனா குமுதினி அவர்களை பாணந்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 07,
26.12.2012.

2-497/2

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் நடாத்தப்பட்ட மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

ஹங்வெல்ல, நம்பபான வீதி, இலக்கம் 24/1 ஆகிய இடத்தில் அமைந்துள்ள சீலவி கர்மாந்தாய தன (பிறைவேட்) லிமிட்டெட் முடிவுறுத்தல் விடயத்திலும்;

வழக்கு இல. :
எச்.சீ. சிவில் 48/2011/கொ

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான நீதிமன்றத்தினால் கலைத்தல் விடயத்திலும் :

கோனபீனுவல சமிந்த அர்னஸ்ட் வித்தானகே, இலக்கம் 148/ஈ, பஹல ஹங்வெல்ல, ஹங்வெல்ல

மனுதாரர் ............................

மேலே பெயர் குறிப்பிட்ட நிறுவனத்தை மூடிவிடுவதற்கான 2011 ஆம் ஆண்டின் ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதிய மனுவொன்று கொழும்பில் நடைபெற்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் மேலே பெயர் குறிப்பிட்ட மனுதாரருக்காக ரொஸ்மிட் லோ சேம்பர்ஸ் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டு அது சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி அந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுப்பதற்கு உள்ளதோடு அது சம்பந்தமாக, அந்த நிறுவனத்தின் கடனாளி அல்லது நிவாரணதாரர் அல்லது அந்த மனுவின் மீது ஆணையொன்று பிறப்பிக்கும்போது அவ்வேண்டு கோளுக்கு விருப்பு அல்லது மறுப்புத் தெரிவிப்பதற்கு விரும்புமிடத்து அவ்வாறான ஏதாவது கடனாளி அல்லது நிவாரணதாரர் நேரடியாகச் சமுகமளித்து அல்லது நிவாரணதாரர்களுக்கு முறைப்பாட்டின் பிரதியொன்று குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியபின் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

ரொஸ்மிட் லோ செம்பர்ஸ்,
இலக்கம் 18, ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07

**குறிப்பு**.- எவராவதொருவர் மேற்படி முறைப்பாடு சம்பந்தமாக சமுகமளிக்க எண்ணுவாராயின் அது சம்பந்தமாக ரொஸ்மிட் லோ செம்பர்ஸ் சட்ட நிறுவனத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் அல்லது தபால் மூலம் அறிவிப்பதோடு அந்த அறிவித்தலை எதிர்க்கவோ அல்லது ஆதரிக்கவோ விரும்பும் எவராவதொருவர் அவரது பெயர் மற்றும் விலாசமும் நிறுவனமொன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசமும் அறிவிக்கப்பட்டு நபரால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவர்களது சட்டத்தரணி (இருப்பாராயின்) அவர்கள் மூலம் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், தபால் மூலம் அனுப்புவதாயின் தேவையான கால அவகாசத்துடன் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு முன்னர் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீதி நிறுவனத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை இத்துடன் அறியத்தருகிறோம்.

2-599

---

## இலங்கை ரோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

நெரன்ஜன் விக்கிரமசிங்க ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் "இலங்கை ரோமன் கத்தோலிக்க

அதிமேற்றிராணியார், மேற்றிராணியார் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3உ மற்றும் 5 உ ஆகிய புதிய பிரிவுகளை உட்புகுத்துதலும் 6 ஆம் பிரிவைத் திருத்துதலும் இச்சட்டமூலத்தின் நோக்கமாகும்.

நெரன்ஜன் விக்கிரமசிங்க,
பாராளுமன்ற உறுப்பினர்,
குருநாகல் மாவட்டம்.

2-461

---

## கொழும்பில் நடாத்தப்பட்ட மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்

நுகேகொடை, கொஹுவல, சுனேத்ரா தேவி இலக்கம் 11/3 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தக்ஸலா வீவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் முடிவுறுத்தல் விடயத்திலும்.

வழக்கு இல. :
எச்.சீ. சிவில் 01/ 2013/கொ

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 219(1) மற்றும் 270(இ) மற்றும் (ஈ) ஆகிய சட்டத்துடன் சொல்லப்பட வேண்டிய 272 (1) ஆகிய சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் கணக்குகள் யாவற்றையும் பூர்த்திசெய்து முடிவுறுத்தல் செய்வதற்கான வேண்டுகோள் விடயத்திலும்:

தக்ஸலா வீவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
இலக்கம் 11/3, சுனேத்ரா தேவி, கொஹுவல,
நுகேகொடை

மனுதாரர் .......................

மேலே பெயர் குறிப்பிட்ட நிறுவனத்தை மூடிவிடுவதற்கான 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆந் திகதி மனுவொன்று கொழும்பில் நடைபெற்ற மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில் மேலே பெயர் குறிப்பிட்ட மனுதாரருக்காக ரொஸ்மிட் லோ சேம்பர்ஸ் நிறுவனத்தினால் முன்வைக்கப்பட்டு அது சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 28 ஆந் திகதி அந்த நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுப்பதற்கு உள்ளதோடு அது சம்பந்தமாக, அந்த நிறுவனத்தின் கடனாளி அல்லது நிவாரணதாரர் அல்லது அந்த மனுவின் மீது ஆணையொன்று பிறப்பிக்கும்போது அவ்வேண்டுகோளுக்கு விருப்பு அல்லது மறுப்புத் தெரிவிப்பதற்கு விரும்புமிடத்து அவ்வாறான ஏதாவது கடனாளி அல்லது நிவாரணதாரர் நேரடியாகச் சமுகமளித்து அல்லது நிவாரணதாரர்களுக்கு முறைப்பாட்டின் பிரதியொன்று குறிப்பிட்ட தொகையைச் செலுத்தியபின் பின்வரும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் :

ரொஸ்மிட் லோ செம்பர்ஸ்,
இலக்கம் 18, ரொஸ்மிட் பிளேஸ்,
கொழும்பு 07

குறிப்பு.- எவராவதொருவர் மேற்படி முறைப்பாடு சம்பந்தமாக சமுகமளிக்க எண்ணுவாராயின் அது சம்பந்தமாக ரொஸ்மிட் லோ செம்பர்ஸ் சட்ட நிறுவனத்துக்கு எழுத்து மூலமாக அறிவித்தல் அல்லது தபால் மூலம் அறிவிப்பதோடு அந்த அறிவித்தலில் எவராவதொருவர் பெயர் ஆயின், பெயர் மற்றும் விலாசமும் நிறுவனமொன்றாயின் நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசமும் அறிவிக்கப்பட்டு நபரால் அல்லது நிறுவனத்தினால் அல்லது அவர்களது சட்டத்தரணி (இருப்பாராயின்) கையொப்பமிட்டு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், தபால் மூலம் அனுப்புவதாயின் தேவையான கால அவகாசத்துடன் 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி பி. ப. 6.00 மணிக்கு முன்னர் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நீதி நிறுவனத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்பதனை இத்துடன் அறியத்தருகிறோம்.

2-600

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.